செ.வெ.எண்: 688 நாள்: 05.11.2024

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

மாவட்டம் முழுவதும் குழந்தைகள் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள், போதை பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இத்தகைய இல்லங்கள் அனைத்தும் பின்வரும் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்கான சட்டங்களின்படி பதிவு செய்யப்பட்டு செயல்பட வேண்டும்.

குழந்தைகள் இல்லங்கள், குழந்தைகள் நலன் (ம) சிறப்புச் சேவைகள் துறையின் மூலமாக இளைஞர் (நீதி பராமரிப்பு மற்றும்பாதுகாப்பு) சட்டம், 2015-ன் கீழ் பதிவு செய்திட வேண்டும். முதியோர் இல்லங்கள், சமூக நலத்துறையின் மூலமாக மூத்த குடிமக்களுக்கான சட்டம் 2007- ன் கீழ் பதிவு செய்திட வேண்டும். மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலமாக மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 -ன் கீழ் பதிவு செய்திட வேண்டும். போதை பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம் (State Mental Health Authority) மூலமாக மனநல பாதுகாப்புச் சட்டம், 2017 -ன் கீழ் பதிவு செய்திட வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள், சமூக நலத்துறையின் மூலமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்களுக்கான (ஒழுங்குமுறை) சட்டம், 2014 -ன் கீழ் பதிவு செய்திட வேண்டும். மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம் (State Mental Health Authority) மூலமாக மனநல பாதுகாப்புச் சட்டம், 2017- ன் கீழ் பதிவு செய்திட வேண்டும்.

அவ்வாறு பதிவு பெறாமல் மாவட்டத்தில் செயல்படும் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், மனவளர்ச்சி குன்றியோர்கள் மாற்றுத்திறனாளிகள், போதை பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் விடுதிகள் ஆகியவை உரிய முறையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள இணையத்தளத்தில்/ அலுவலகத்தில் பதிவு செய்ய விண்ணப்பிக்க ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்படுகிறது.

1.குழந்தைகள் இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு https://dsdcpimms.tn.gov.in என்ற இணையதள முகவரியில் (அல்லது) மாவட்ட குழந்தைகள் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். 2.முதியோர் இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு www.seniorcitizenhomes.tnsocialwelfare.tn.gov.in என்ற இணையதள முகவரியில் (அல்லது) மாவட்ட சமூக நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

3.மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு https://scd.tn.gov.in (அல்லது) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். 4.மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு https://scd.tn.gov.in and navigate to “Thiran Platform” (அல்லது) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். 5.போதை பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு https://scd.tn.gov.in (அல்லது) முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில நல ஆணையம், அரசு மனநல காப்பகம், மேடவாக்கம் குளம் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10 அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். 6.பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு www.tnswp.com (அல்லது) மாவட்ட சமூக நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். 7.மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் அரசு அங்கீகாரம் மற்றும் பதிவுச்சான்று பெறுவதற்கு https://tnhealth.tn.gov.in/tngovin/dme/dme.php (அல்லது) முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில நல ஆணையம், அரசு மனநல காப்பகம், மேடவாக்கம் குளம் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10 அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

இதன்படி பதிவு செய்யப்படாமல் இயங்கும் அனைத்து இல்லங்கள் மற்றும் விடுதிகள் உடனடியாக மேற்காணும் இணையத்தளம்/அலுவலகம் வாயிலாக ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க தவறும்பட்சத்தில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இவ்வில்லங்களுக்கு சீல் வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai